**வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சி**
**க.பொ.த உயர்தரம் 2020**
**இலங்கை வரலாறு 25.T.II.**

**தரம் :- 13** **நேரம் :- 3.00 மணித்தியாலம்**

- முதலாம் வினா உட்பட பகுதி B, பகுதி C ஆகியவற்றில் இருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கு விடையெழுதுக.

**<u>பகுதி A</u>**

1) உமக்கு வழங்கப்பட்ட புறஉருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயர் இடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I. | கந்தரோடை | II. | நீர்கொழும்பு | III. | மாத்தளை |
| IV. | பாகியங்கல | V. | கால்கநதி | VI. | பல்லவங்க |
| VII. | நாற்சதுவவாவி | VIII. | கலாதீத்த | IX. | புலஸ்திபுர |
| X. | கற்பட்டி | XI. | தெய்வேந்திரமுனை | XII. | சப்ரகமுவமாகாணம் |

(புள்ளிகள் 12)

**<u>பகுதி B</u>**

2) "மகாவம்சத்தின் முதலாம் பாகம் மகாவிகாரையின் வரலாறு ஆகும்"

I. மகாவம்சத்தின் ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுக?

II. மகாவம்சம் எழுதிய காலத்து அரசரின் பெயரைத் தருக?

III. மகாவம்சத்திற்கு ஏற்பட்ட உரைநூலின் பெயர் யாது?

IV. மகாவிகாரை பற்றி சுருக்கமான விளக்க உரை உழுதுக?

V. மகாவம்சம் சமய அரசியல் வரலாற்றை கற்றுக்கொள்வதற்கு பெறுமதியான நூலாகும் இக்கூற்றை ஆராய்க? (புள்ளிகள் 16)

3) வட்டகாமினி மன்னனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களின் கீழ் பரிசீலனை செய்க.

I. அரசன் எதிர்நோக்கிய வெளிநாட்டு உள்நாட்டுச் சவால்கள்.

II. சமய நடவடிக்கைகள்.

(புள்ளிகள் 16)

4) 1ம் பராக்கிரமபாகுவின் சாதனையை மேலே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் இரண்டு தொடர்பாக ஆராய்க.

I. நாட்டை ஒன்றுபடுத்துதல்.

II. சமயப் பணிகள்.

III. நீர்ப்பாசன நடவடிக்கை.

IV. வெளிநாட்டுத் தொடர்புகள். (புள்ளிகள் 16)

VADAICTEC

5) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு வரலாற்று சிறுகுறிப்பு எழுதுக.

I. 2ம் பராக்கிரமபாகுவின் சாதனைகள்.

II. கோட்டைகால இலக்கியம்.

III. யாழ்ப்பாணமும் ஆரியச்சக்கரவர்த்திகளும்.

IV. பண்டையகால நீர்ப்பாசன தொழில்நுட்பம்.

(புள்ளிகள் 16)

## பகுதி C

6) கண்டிராட்சிய வரலாற்றில் கீர்த்திஸ்ரீராஜசிங்க மன்னன் அரசியல் பண்பாட்டுத் துறைகளில் ஏற்படுத்திய சாதனைகளை மதிப்பீடு செய்க.

(புள்ளிகள் 16)

7) " கண்டி உடன்படிக்கையில் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாமையால் கண்டி மக்களிடம் ஏற்பட்ட அதிர்ப்தியே 1817 – 1818 போராட்டம் இடம்பெறக் காரணமாகும்"

I. பிரித்தானியரால் கண்டிராட்சியம் கைப்பற்றுவதற்கு முன்னா் அந்த இராட்சியத்துடன் தொடர்புகளைப் பேணிய ஆங்கில அதிகாரி யாா்?

II. கண்டிஉடன்படிக்கையில் கையெழுத்திட்ட தேசாதிபதியையும் கண்டி பிரபுக்களில் ஒருவரையும் தருக?

III. கண்டி ஒப்பந்தத்தில் அடங்கியிருந்த அம்சங்களை சுருக்கமாக எழுதுக?

IV. மேலே தரப்பட்ட குறிப்பினை நுணுக்கமாக பரிசீலனை செய்க?

(புள்ளிகள் 16)

8) சோல்பரி அரசியல் அமைப்பின் பிரதான அம்சங்களை பரிசீலனை செய்க.

( புள்ளிகள் 16)

9) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினது வரலாற்றுக் குறிப்பினை எழுதுக.

I. இலங்கையின் கரையோரத்தை பிரித்தானியா் கைப்பற்றல்.

II. பிரித்தானியா் ஆட்சியின் பெருந்தோட்டப் பயிா்ச்செய்கை.

III. 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பு.

IV. இலங்கை தேசிய காங்கிரஸ்.

( புள்ளிகள் 16)

VADAZICTEC

**வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சி**
**க.பொ.த உயர்தரம் 2020**
**இலங்கை வரலாறு 25.T.I.**

**தரம் :- 13** **நேரம் :- 3.00 மணித்தியாலம்**

## பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை அடைப்பினுள் இடுக.**

- இலக்கம் 1 முதல் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது உள்ளது. அப்பெயரை இனங்கண்டு அவ்விலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

1) 1. இபன்கட்டுவ 2. கல்துமுல்ல 3. பட்டதொம்பலென
4. பெரகல 5. யடிகல்பொத்த ( )

2) 1. களுகங்கை 2. மகாவலிகங்கை 3. கம்பீரநதி
4. வளவகங்கை 5. கல்லோயா ( )

3) 1. ஊரான்தொட்ட 2. யம்புகோலபட்டினம் 3. கோகன்ன
4. மகாதீர்த்த 5. சம்மாந்துறை ( )

4) 1. சூரதிஸ்ஸ 2. சேனன்குத்திக 3. எல்லாலன்
4. குட்டபரிந்த 5. மாகன் ( )

5) 1. தந்துர போர் 2. கட்டுவனபோர் 3. ரந்தெனிவலபோர்
4. பலனப்போர் 5. கண்ணொருவபோர் ( )

6) 1. பூட்டாவேரட்டேரால 2. கிங்குரான்கெற்றடிங்கிரிரால 3. கொடகெதரமொகட்டால
4. கிபுலகெதரமொகட்டால 5. கொகிகும்பிரேரட்டால ( )

7) 1. வன்னி 2. சம்பிரகமுவ 3. நுவரகலாவிய
4. தம்மன்கடுவ 5. ஹத்கோரலே ( )

8) 1. கென்றிமன்ங்மேசன்மூர் 2. சோல்பெரிபிரபு 3. ஒலிவர்குணதிலக
4. ஜோன்கொத்தலாவெல 5. வில்லியம்கொபலாவ ( )

9) 1. ஒலிவர்குணதிலக 2. டி.ஸ்.சேனனாயக்க 3. டட்லிசேனனாயக்க
4. ஜோன்கொத்தலாவல 5. டபிள்யூ தஹநாயக்க ( )

10) 1. கல்லோயகுடியேற்றம் 2. பராக்கிரமசமுத்திரகுடியேற்றம் 3.மின்னேரிகுடியேற்றம்
4. நாச்சதுவகுடியேற்றம் 5. இரணைமடுக்குடியேற்றம் ( )

VADAZICTEC

- **இலக்கம் 11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுள் ஐந்து சோடிப்பெயர்கள் தரப்பட்டுள்ளது அதில் ஒரு சோடி ஏனையவற்றுடன் பொருந்தாது உள்ளது அதனை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

11) 1. தெதுருஓயா - ரஜ்ஜரநதி
2. மல்வத்தோயா - கதம்பநதி
3. கல்லோயா - கோணநதி
4. வளவகங்கை - வனநதி
5. மகாவலிகங்கை - மகாவாலுகநதி ( )

12) 1. இன்டிகா - மெகத்தனீஸ்
2. டிமுண்டோ - அரிஸ்ரோட்டில்
3. டொபோக்கிரவியாகிறிஸ்ரியானா- பிளினி
4. யாழ்ப்பாணவைபமாலை - மயில்வாகனம்
5. ஜியோகிரபியா - தொலமி ( )

13) 1. மகிந்ததேரர் - தேவனம்பியதீசன்
2. ஹேமமாலா தந்தகுமார - ஸ்ரீமேகவண்ணன்
3. புத்தகோசதேரர் - புத்ததாச
4. பாகியன் - மகாநாம
5. உபாலிதேரர் - கீர்த்திஸ்ரீராயசிங்கன ( )

14) 1. 7ம் புவனேகபாகு - தொன்லூயி
2. தர்மபால - தொன்யுவான்
3. யமசிங்கபண்டார - தொன்பிலிப்
4. குசுமாசனதேவி - தோனாகதறினா
5. கோணப்புபண்டார - ஒஸ்திரியான்தொன்யுவான் ( )

15) 1. சேர் பொன் அருனாசலம் - இலங்கை தேசிய காங்கிரஸ்
2. என்.எம்.பெரேரா - இலங்கை சமசமாயக்கட்சி
3. டி.எஸ்.சேனநாயக்க - ஐக்கியதேசியக்கட்சி
4. ஜி.ஜி.பொன்னம்பலம் - சமஸ்டிக்கட்சி
5. எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ( )

VADAZICTEC

*** இலக்கம் 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஓ,லு நிரல்களாக தரப்பட்டுள்ளன அவற்றின் பொருத்தமான சேர்மானத்திற்கு ஏற்ப சரியான விடை இலக்கத்தை எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. அனுராதபுரம் | A.முதலாம் புவனேகபாகு |
| 2. யாழ்ப்பாணம் | B.இரண்டாம் புவனேகபாகு |
| 3. யாப்பகூவ | C.நான்காம் புவனேகபாகு |
| 4. குருநாகல் | D.விஜய கூழங்கை சக்கரவர்த்தி |
| 5. கம்பளை | E.பண்டுகாபய |

1) EDABC 2) DEACB 3)CBADE 4) CDAEB 5) BEADC ( )

17)

| X | Y |
|---|---|
| 1. ஹந்தொட்ட அணைக்கட்டு | A. வளவ கங்கை |
| 2. எலகர அணைக்கட்டு | B. அம்பன் கங்கை |
| 3. மினிப்பே அணைக்கட்டு | C. களு கங்கை |
| 4. தங்கத்தி அணைக்கட்டு | D. மகாவலி கங்கை |
| 5. கொட்டபத்த அணைக்கட்டு | E. தெதுறு ஓயா |

1.BEACD 2. CBDAE 3. CDAEB 4. DEACB 5. EDABC ( )

18)

| X | Y |
|---|---|
| 1. மகா பத்த | A. யானை பராமரிப்புத்துறை |
| 2. கொட்டல் பத்த | B. நெசவாளர் துறை |
| 3. குருவே பத்த | C. போக்குவரத்துத் துறை |
| 4. மடிகே பத்த | D. கறுவாத் துறை |
| 5. கின்னர பத்த | E. கம்மாளர் துறை |

1. EDABC 2. DEAC 3. CBDAE 4. CDAEB 5. BEADC ( )

19)

| X | Y |
|---|---|
| 1. காரகல | A. விஜயபாகு பிரிவேன |
| 2. தொட்டகமுவ | B. பத்மாவதி பிரிவேன |
| 3. பொப்பிலியான | C. ஸ்ரீகனாநந்த பிரிவேன |
| 4. தெவினுவர | D. சுனேத்திராதேவி பிரிவேன |
| 5. றைகம | E. இறுகல்குலதிலக பிரிவேன |

1. BDECA 2. BCDEA 3. BADEC 4. BDCEA 5. BACDE ( )

VADAZICTEC

20)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | தரிசு நிலக் கட்டளைச் சட்டம் | A. | 1871 |
| 2. | கம்சபா கட்டளைச் சட்டம் | B. | 1840 |
| 3. | நீர்ப்பாசன கட்டளைச் சட்டம் | C. | 1856 |
| 4. | வீதி கட்டளைச் சட்டம் | D. | 1848 |
| 5. | மாநகரசபை கட்டளைச் சட்டம் | E. | 1865 |

1. BDECA    2. BCDEA    3. BADEC    4. BDCEA    5. BACDE    (      )

*** 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுள் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன அதில் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தாது உள்ளது அவ்விலக்கத்தை தெரிவுசெய்து எழுதுக.**

21) அனுராதபுர இராசதானியின் நிர்வாகம்

1. முழு நிர்வாக இயந்திரத்தின் மையமாக மன்னன் விளங்கினான்.
2. அனைத்து அனுராதபுர மன்னர்களும் மௌரியவம்சத்தை சேர்ந்தவர்கள்.
3. கோட்பாட்டின் அடிப்படையில் நீதித்துறையில் தலைமை மன்னனாக விளங்கினான்.
4. கோட்பாட்டளவில் மன்னனே மண்ணுக்குத் தலைவனாக விளங்கினான்.
5. மன்னனின் பிரதான வருமானத்தின் மூலமாக நிலம் காணப்பட்டது.    (      )

22) 1ம் விஜயபாகு

1. 1ம் விஜயபாகு இளமைக் காலத்தில் கீர்த்தியென்னும் பெயரால் அழைக்கப்பட்டான்.
2. புத்தராஜ என்னும் பிரதானியே 1ம் விஜயபாகுவிற்கு ஆதரவு புரிந்தான்.
3. சோளரை இலங்கையில் இருந்துதுரத்தியபின்னர்இலங்கையை ஒன்றாகஇணைத்தான்.
4. 1ம் விஜயபாகு பர்மாதேசத்தின் மீது படையெடுத்தான்.
5. 1ம் விஜயபாகு பொலனறுவையை தலைநகரமாக அமைத்தான்.    (      )

23) கோட்டை இராட்சியம்.

1. 2ம் இராஜசிங்கன் கோட்டை நகரத்தை அழித்தான்.
2. 5ம் புவனேகபாகுவை கோட்டை அரசனாகக் கொள்வர்.
3. நிஸங்கஅழகேஸ்வரன் கோட்டையினை அரணாக அமைத்தான்.
4. 6ம் பராக்கிரமபாகு கோட்டை அரசர்களின் முதன்மையானவர்.
5. தர்மபாலன் வழங்கிய தர்மசாசனத்தின் மூலம் கோட்டையை போர்த்துக்கேயருக்கு எழுதிக்கொடுத்தான்.    (      )

VADAZICTEC

24) கோல்புறுக் கமரன் ஆனைக்குழுவின் சிபார்சுகள்

1. அரசின் வர்த்தக உரிமை நீக்கப்பட்டமை
2. சட்டசபை சட்டநிர்வாகசபை அமைத்தல்
3. இராஜகாரிய முறை ஒழித்தல்
4. ஒருமுனைப்படுத்தப்பட்ட நீதிவழங்கும் முறையின் உருவாக்கம்.
5. வரையறுத்த வாக்குரிமை கொண்டுவரப்பட்டது. ( )

25) 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு.

1. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி
2. சட்டமன்றம் தேசிய அரசு பேரவை எனப்பட்டது.
3. விகிதாசார பிரதிநிதித்துவ முறை
4. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு முறை.
5. அமைச்சரவையின் தலைவராக ஜனாதிபதி காணப்படுவர் ( )

*** 26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் A,B,C,D எனும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும் சரியான விடையை அல்லது விடைகளை தெரிவுசெய்து எழுதுக.**

A யும் B யும் மட்டும் சரியாயின் - 1 எனவும்

B யும் C யும் மட்டும் சரியாயின் - 2 எனவும்,

C யும் D யும் மட்டும் சரியாயின் - 3 எனவும்

A யும் C யும் மட்டும் சரியாயின் - 4 எனவும்

ஒரு விடை அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடை சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

26) மேல்வரும் குறிப்புக்களுள் எது /எவை பண்டுகாபயனின் ஆட்சி பற்றிய சரியானது / சரியானவை

A அனுராதபுரத்தை இராசதானியாக அமைத்தான்
B திசாவாவி என்னும் குளத்தைக் கட்டினான்.
C கிராமங்களின் எல்லைகளை வரையறை செய்தமை
D சோமாவதியை பண்டுகாபயன் மணம் புரிந்தான் ( )

27) முன்வரலாற்றுக் காலம் பற்றிய குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை

A வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கு முந்திய கால கட்டம் முன்வரலாற்றுக் காலகட்டம் என அழைக்கப்பட்டது.
B இக்காலகட்ட மனிதன் உணவுத் தேவைக்காக முழுமையாக வேட்டையாடுவதில் ஈடுபட்டான்
C உடரஞ்சாமடத்தில் முன்வரலாற்றுக்கால வீடு ஒன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன
D இக்காலத்தில் இரும்பைப் பயன்படுத்த மனிதன் அறிந்திருந்தான் ( )

VADAZICTEC

28) கம்பளை காலம் தொடர்பாக மேல்வரும் கூற்றுக்களுள் எது/எவை சரியானவை.

A நான்காம் புவனேகபாகு கம்பளையை இராசதானியாக்கினான்

B யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி கம்பளை இராட்சியத்தின் மீது படையெடுத்தனர்

C தெவிநுவர உபுலவன் கோயில் அமைக்கப்பட்டது

D கிரா, ஹம்ச சந்தேகங்கள் எழுதப்பட்டன ( )

29) டொனமூர் அரசியல் அமைப்புத் தொடர்பாக மேல்வரும் குறிப்புக்களுள் எது/எவை சரியானது

A இருசபை கொண்ட பாராளுமன்றம் அறிமுகம்

B இனவாரித் தெரிவுமுறை நீக்கப்பட்டமை

C அரசசேவைகள் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது

D பிரதேசவாரி தெரிவுமுறை அறிமுகம் ( )

30) 1818 கலவரம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது/எவை சரியானவை

A டொரின்டன் பிரபுவின் அடக்குமுறையே போராட்டத்திற்கு காரணம்.

B 1815 உடன்படிக்கையை முறையாக அமுல்படுத்தாமையே ஆகும்.

C 1818 கலவரத்தை அடக்க பாழ்நில திட்டத்தை பிரித்தானியர் பின்பற்றியமை.

D காணிகளை இழந்த விவசாயிகளே இவ் போராட்டத்தில் ஈடுபட்டனர். ( )

- **31 தொடக்கம் 35 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அடைப்புக்கோட்டில் எழுதுக**

31) பின்வரும் மன்னர்களுள் மோரிய வம்ச மன்னனாக விளங்கியவர் யார்?

1. வசவன் 2. முதலாம் கஜபாகு 3. 1ம் பராக்கிரமபாகு
4. வங்கநாசிகதிஸ்ஸ 5. தாதுசேனன் ( )

32) 1ம் பராக்கிரமபாகு, 2ம் கஜபாகுவிற்கு இடையிலான உடன்பாடு பற்றி குறிப்பிடும் கல்வெட்டு எது?

1.தோனிகல கல்வெட்டு 2.அம்பகமுவ கல்வெட்டு 3.சங்கமுவவிகாரைக் கல்வெட்டு
4. தெவனகல கல்வெட்டு 5. மிகிந்தலைக் கல்வெட்டு ( )

33) மினிப்பே கால்வாயைக் கட்டியவன் யார்?

1. 1ம் அக்போதி 2. 2ம் முகலன் 3. 2ம் அக்போதி
4. தாதுசேனன் 5. மகாசேனன் ( )

34) கண்டிராட்சிய காலத்தில் போக்குவரத்திற்கான அமைப்பு எவ்வாறு அழைக்கப்பட்டது?

1. கொட்டல்பத்த 2. மடிகேபத்த 3. குருவேபத்த
4. மகாபத்த 5. கின்னரபத்த ( )

VADAZICTEC

35) வித்தியாலங்காரபிரிவேனாவைஅமைத்தவா்யாா்?

1. ஹிக்கடுவசுமங்கல தேரா் 2. தா்மாலோக தேரா் 3. குணாநந்த தேரா்
4. வலானேசித்தார்த்த தேரா் 5. வெலிவிட்டசோர தேரா் ( )

*** 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளது ஒவ்வொரு வினா தொடா்பாகவும் உள்ள கூற்றுச் கோடிகளுக்குக் கீழே தரப்பட்ட 1, 2, 3, 4, 5 என்பவற்றில் பொருந்துவதை தெரிந்து அதன் இலக்கத்தை இடுக.**

| | 1ம் கூற்று | 2ம் கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல்கூற்றினை நன்கு விளக்குவதாகும் |

| 1ம் கூற்று | 2ம் கூற்று |
|---|---|
| 36) இப்பன் கட்டுவ மெகாதிலிக் (பெருங்கற்காலம்) மயானமாகும் | சீனயாத்திரிகனான பாகியன் இலங்கையின் அபயகிரி விகாரையில் தங்கினான். ( ) |
| 37) தம்பதெனியா காலத்தில் சந்திரபானு எனும் யாவக அரசன் இரண்டு முறை படையெடுத்தான் | தம்பதெனியாவின் சிறந்த மன்னனாக 4ம் விஜயபாகு கருதப்பட்டான். ( ) |
| 38) ஒல்லாந்தா் இலங்கையில் ரோமன் கத்தோலிக்க சமயத்தை அறிமுகம் செய்தனா் | போா்த்துக்கேயா் காலத்தில் ஸ்கோலாக் கல் சபை கல்வியை நிா்வகித்தது. ( ) |
| 39) பெருந்தோட்ட பயிா்ச் செய்கையை தொடா்புபடுத்தி வா்த்தக போக்குவரத்துப் பாதையாக களனிப் பள்ளத்தாக்கு புகையிரதப் பாதையிருந்தது | ஏற்றுமதி பொருளாதாரம் காரணமாக பெருந்தோட்ட பிரதேசங்களில் போக்குவரத்து மட்டுமன்றி துறைமுகங்களுடன் வீதியை இணைக்கும் தேவை காணப்பட்டது. ( ) |
| 40) 1796ல் இலங்கையின் கரையோரம் பிரித்தானியா் ஆட்சிக்கு உட்பட்டது | இலங்கை 1948ல் ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றது. ( ) |

( 40 புள்ளிகள்)

VADAZICTEC